**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 308/2013**
**நாள்.20.06.2023**
**வா.சா.1- கண்ணையா**
**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் பயன்படுத்தி வரும் கிணற்றையும், மின் இணைப்பையும் பிரதிவாதிகள் தடையிடைஞ்சல் செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மூக்க மருதவீரன் பிள்ளை எனது முப்பாட்டனார். ஆண்டியப்பிள்ளை , ஆறுமுகம் பிள்ளை, பழனிவேல் பிள்ளை ஆகியோர்கள் மூக்க மருதவீரன் பிள்ளையின் மக்கள் ஆவார்கள். 1ம் பிரதிவாதி மருதை வீரன் பிள்ளை ஆண்டியப்பபிள்ளையின் பேரன் என்றால் சரிதான். நான் பழனிவேல் பிள்ளையின் பேரன் என்றால் சரிதான். எனது முப்பாட்டனாருக்கு சர்வே எண்.1621/2ல் 2 ஏக்கர் 83 சென்டும், சர்வே எண்.1619ல் 65 சென்டும், சர்வே எண்.1609/2ல் 2 ஏக்கர் 5 சென்டும் பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை மூக்க மருதை வீரன் பிள்ளையின் மக்களான ஆண்டியப்பிள்ளை , ஆறுமுகம் பிள்ளை, பழனிவேல் பிள்ளை ஆகியோர்கள் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.1621/2ல் ஒரு கிணறு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1619ல் ஒரு கிணறு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1619ல் உள்ள கிணறு எனது நடுப்பாட்டனாரான ஆறுமுகம் பிள்ளைக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.1621/2ல் உள்ள கிணறு ஆண்டியப்ப பிள்ளைக்கும், பழனிவேல் பிள்ளைக்கும் சேர்ந்த பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பழனிவேல் பிள்ளைக்கு மட்டுமே பாத்தியப்பட்டது.

எனது நடுப்பாட்டனார் ஆறுமுகம் பிள்ளை ஆசிரியராக பணி புரிந்தவர் என்றால் சரிதான். எனது பாட்டனார் பழனிவேல் பிள்ளை ஜுரியாக பணி புரிந்தார் என்றால் சரிதான். சர்வே எண்.1609/2ல் பூர்வீக வீடுகள் 3 உள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 வீடுகளும் எனது மூன்று பாட்டனாருக்கும் தலா ஒரு வீடு பாத்தியம் என்றால் சரிதான். எனக்கும், எனது தம்பிக்கும் 2005ம் ஆண்டு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எனது தகப்பனார் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி

செட்டில்மெண்ட் ஆவணப்படி வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பத்திரத்தில் எனக்கும், எனது தம்பிக்கும் சர்வே எண்.1621/2 ல் உள்ள கிணற்றில் தலா 1/4 பாகம்  பாத்தியம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியும். கடந்த 1935 ம் ஆண்டு எனது பெரிய பாட்டனாரான ஆண்டியப்ப பிள்ளை, இருளப்ப பிள்ளை என்பவருக்கு ஒரு ஈடு கடன் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஈடு பத்திரத்தில் எனது நடுப்பாட்டனாரான ஆறுமுகம் பிள்ளையும், எனது பாட்டனாரான பழனிவேல் பிள்ளையும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஈடு கடன் பத்திரத்தில் சர்வே எண்.1621/2 ல் உள்ள கிணற்றில் பாதி பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் உள்ள மின் இணைப்பு எண் ஆதியில் 127 என்றும் பின்பு 190 என்றும் உள்ளது என்றால் சரிதான். 1966 ம் ஆண்டு 4 ம் மாதம் மற்றும் 9 ம் மாதம் செலுத்தப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.127 ல் கட்டப்பட்டுள்ள மின் ரசீதுகளில் பழனிவேல் பிள்ளை, மருதை வீரன் என இருவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள மருதை வீரன் என்பது எனது முப்பாட்டனார் பெயர்  ஆகும். மின் இணைப்பு எண்.190 என மாற்றம் செய்யப்பட்ட பிறகும் பழனிவேல் பிள்ளை, மருதை வீரன் என இருவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள மருதை வீரன் என்பது எனது முப்பாட்டனார் பெயர்  ஆகும். மின் இணைப்பு எண் 190 எந்த ஆண்டு பெறப்பட்டது என்றால் 1966 ல் பெறப்பட்டது. சர்வே எண்.1621/2 ல் உள்ள கிணற்றில் எனது முப்பாட்டனார் காலத்தில் மின் இணைப்பு பெறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் எனது பெரிய பாட்டனார் ஆண்டியப்ப பிள்ளை காலத்திலும் மின் இணைப்பு பெறவில்லை என்றால் சரியல்ல.  எனது முப்பாட்டனார் மூக்க மருதை வீரன் பிள்ளை 1933 ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது  பெரிய பாட்டனார் ஆண்டியப்பிள்ளை இறந்த விபரம் எனக்கு தெரியாது. எனக்கு தற்போது  57 வயதாகிறது. 1 ம் பிரதிவாதி மருதை வீரனுக்கு 85 வயதாகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா வழக்கில் நான் சர்வே எண்.1621/2 ல் உள்ள கிணற்றையோ, கிணற்றில் உள்ள மின் இணைப்பையோ எனக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை

கோரவில்லை என்றால் சரிதான். நான் மட்டும் தாவா கிணற்றையும், மின் இணைப்பையும் தனித்து அனுபவித்து வருவதை நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் எனது பாட்டனார்கள் வாய்க்கறால் பாகம் செய்து கொண்டார்கள் என்று கூறியுள்ளதில் அவர்கள் எவ்வாறு சொத்துக்களுக்கு பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதியின் பாகத்தில் சுமார் 70 தென்னை மரங்கள் இருந்தது என்றால் சரிதான். நான் எனது ஊருக்கு கடந்த 2011ம் ஆண்டு தான் குடிவந்தேன். அதற்கு முன்பு தாவா சொத்துக்களை எனது தகப்பனார் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். நான் குடிவருவதற்கு முன்பு பிரதிவாதி எவ்வாறு விவசாயம் செய்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா கிணற்றிலும், மின் இணைப்பிலும் பிரதிவாதிகளுக்கு பங்கு உண்டு என்று சொன்னாலும், அதை மறைத்து நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
R VANJI NATHAN

**Principal District Munsif**
**Vedasandur**